
R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
December 2018




## தமிழக கிறிஸ்துவின் சபை சக ஊழியர்கள்

Our Radio Program: Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.15 P.M
Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M
& Tamilan TV Every Thursday 6.00 P.M

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com
Office Address
The Word of Christ, D/5 Rajan Nagar
Batlagundu -624202, DINDIGUL DIST
TAMIL NADU INDIA

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 டிசம்பர் 2018 கனி 1

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்



namonitore.ru

**Arjunan in Tamil:**

TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:15 - 5:30 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**

Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel T

**Philemon & Kingsley in Tamil:**

Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**

Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**

Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**

Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

World Evangelism Gospel Media


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 220

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. பாதாளம் கர்த்தரைத் துதிக்குமா? மரணம் அவரைப் போற்றுமா?
2. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், எதினால் நிறையவேண்டும்?
3. மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடாமற்போனார்கள் ஆகையால் அவர்கள் காரியம் வாய்க்காமற்போய், அவர்கள் மந்தையெல்லாம் என்னவாயிற்று?
4. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய எவ்விதமானபிள்ளைகளுமாயிருக்கவேண்டும்?
5. இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்? என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
6. சகல பரிபூரணமும் எவருக்குள் வாசமாயிருக்கிறது?
7. தன் பிரபுக்களில் ஆயிரம் பேருக்கு ஒரு பெரிய விருந்துசெய்து, அந்த ஆயிரம் பேருக்கு முன்பாகத் திராட்சரசம் குடித்த ராஜா யார்?
8. மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்ட சபையார் யார்?
9. தானியத்துக்காகவும், திராட்சரசத்துக்காகவும் எவர்கள் கூடுகிறார்கள் என்று கர்த்தர் சொல்லியிருந்தார்?
10. எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களை சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று அறிய பவுல் யாரை அனுப்பினார் ?

## வேதாகம ஆய்வு... 5

**அதோனிபேசேக்**

1. கானான் தேசத்தில் 'பேசேக்' என்னும் ஊரிலிருந்த ராஜா
2. இவன் 70 ராஜாக்களுடைய கை கால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டவன்.
3. தன் மேசையின் கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்னும்படி அந்த ராஜாக்களை தின்னவைத்தான்.
4. யூதாவின் ஜனம் இவனுக்கும் அப்படியே செய்தார்கள்

நியாயாதிபதிகள் 1:3-7



Adonibezec

சிறுவர் பகுதி

# ஞானதிஷ்டிக்காரன்

வேத பகுதி: 1சாமுவேல்9:6-13



ஞானதிஷ்டிக்காரன் என்றால் யார் என்று உங்களுக்கு தெரியுமா? தீர்க்கதரிசிகளே முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்று அழைக்கப்பட்டனர். சவுலும் அவனுடைய வேலைக்காரனும் தன்னுடைய தகப்பனின் கழுதையைத் தேடிப் போனார்கள். பல நாடுகளில் தேடியும் கழுதை காணப்படவில்லை சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது வேலைக்காரன் இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக் கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒருவேளை அவர் நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்.

அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து; நாம் போனாலும் அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்து போயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான். அதற்கு அந்த வேலைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா? இதோ, என் கையில் இன்னும் கால் சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான்.

அன்பான, தம்பி, தங்கைகளே, கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற வசனத்தின்படி வெறுங்கையாக தேவ மனிதனை சந்திக்க விருப்பமில்லாது, யோசனை செய்து தன்னிடத்திலிருந்த விலையேறப்பெற்ற கால்சேக்கல் வெள்ளியை ஞானதிஷ்டிக்காரனாகிய சாமுவேலுக்குக் கொடுக்க முன்வந்த அந்த வேலைக்காரனை சற்று யோசித்துப்பாருங்கள். நீங்கள் உங்கள் சபை போதகரை சந்திக்கும்போது வெறுங்கையோடே செல்லுகிறீர்களா? அல்லது அவர் நமக்கு ஏதாவது கொடுப்பார் என்ற ஏக்கத்தோடு செல்லுகிறீர்களா? தேவ மனிதன் தேவனுடைய வார்த்தைகளையே கொடுப்பான். நீங்கள்தான் பொருட்களினால் அவர்களை கனப்படுத்தவேண்டும். இதற்கு சவுலும் அவன் வேலைக்காரனும் நமக்கு நல்ல முன்மாதிரி. புதிய ஏற்பாட்டிலும் அநேகர் பவுல் போன்றோரை தங்கள் பொருட்களினால் கனப்படுத்தியதை நாம் வாசிக்கின்றோம்.

<u>*மனப்பாட வசனம்*</u>

*“கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்” (லூக்கா6:38)*



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 டிசம்பர் -2018 கனி - 1

ஆசிரியருரை

## கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்
## Stand Firm In The Lord



நாங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்று சொல்லுகிற அநேகர் கர்த்தருக்குள் நிலைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அந்த பெயரில் வேண்டுமானால் நிலைத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம் ஆனால் அவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவில்லை. பின்பு கர்த்தருக்குள் நிலைத்திருத்தல் என்றால் எப்படி? என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். பவுல் சொல்லுகிறார்; "எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்" என்கிறார் (பிலி.4:1). இந்த வசனத்தில் இந்தப்படியே என்கிறாரே, எந்தப்படி நிலைத்திருக்கவேண்டும்? முன்னுள்ள அதிகாரத்தில் அதன் விளக்கத்தையும் தான் கர்த்தருக்குள் நிலைத்திருந்த விதத்தையும் பற்றியும் சொல்லுகிறார். "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" என்கிறார் (பிலி.3:7). லாபமாயிருக்கிறவைகளை விட்டு விடுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. யாரும் நஷ்டத்தை விரும்பமாட்டார்கள். இங்கே பவுல் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் என்கிறார். அவர் தனக்கு லாபமாயிருந்ததை கிறிஸ்துவுக்காக விட்டு விட்டிருக்கிறார் என்பதுவே உண்மை.

சில காரியங்களாலே நமக்கு அதிகமான ஆதாயம் கிடைக்கலாம். ஒரு விக்கிரகத்தை செய்து விற்பனை செய்வதாலே நமக்கு அதிகமான ஆதாயம் கிடைக்கலாம். அந்த ஆதாயம் கிறிஸ்துவை பிரியப்படுத்துமா? அது கர்த்தருக்கு ஏற்ற ஒரு தொழிலா? நாம் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கு அது ஏற்ற ஒரு தொழில் அல்ல. ஆகையால் அந்த ஆதாயத்தை நாம் விட்டுவிடவேண்டும். பவுல் ஆசியாவிலே தங்கியிருந்த காலத்தில் ஒரு பெரிய கலகம் உண்டானது. தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினாலே சிறிய கோவில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயத்தை வருவித்துக்கொண்டிருந்தான். இவன் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்றவேலையாட்களையும் கூடிவரச்செய்து; மனுஷர்களே இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள், இப்படியிருக்க, கைகளில் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல்

என்பவன் சொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக் கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள். இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப்போகிறதற்கும் , ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான். இந்த தட்டானைபோல அநேகர் தங்களுடைய தொழில் பாதிக்கப்படும் என்று பயந்து உண்மைக்கு செவிகொடுக்க மறுக்கின்றனர்.

மேலும், பவுல் சொல்லும்போது; "அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்கிறார் (பிலி.3;8). கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவு எல்லாவற்றைக்காட்டிலும் மேலானது. அதற்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணுவதாக சொல்லுகிறார். சபை கூடிவருதலை அநேகர் விட்டுவிடுகின்றனர். அன்றைய நாளில் நல்ல வருமானம் கிடைக்கிறது. ஞாயிற்றுகிழமையில் மற்றநாட்களை விட கூடுதலாக விற்பனையாகிறது. வருமானமும் கூடுதலாக கிடைக்கிறது, ஆகையால் அடுத்தவாரம் சபைக்கு செல்லலாம் என்று சிலர் வியாபாரத்தில் தங்களுடைய கவனத்தை செலுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தரையும் அவருடைய போதனைகளையும் அறிந்துகொள்ளுவது எப்படி? தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் மனுஷன் பிழைப்பான். அவ்வளவு வல்லமையுள்ள வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து புறப்பட்டுவரும். அதைக்கேட்பதற்கும் அதை அறிந்துகொள்ளுவதற்கும் நாம் முக்கியதுவம் கொடுக்கவேண்டுமல்லவா? அதற்கு நிகரானது இப்பூமியில் ஒன்றுமில்லை. இதை அப்போஸ்தலனாகிய பவுல் நன்கு அறிந்தவராயிருந்தபடியால் எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் என்கிறார்.

மேலும், "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்கிறார் (பிலி.3:10,11). உன்னதத்தின் தேவன் மனிதனாக பிறந்து அடிமையின் சாயலானார். அவருடைய பாடுகளை நாம் ஒவ்வொரு வாரமும் நினைவு கூருகிறோம். பவுல் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாக விரும்பி, அந்த பாடுகளை தானும் அநுபவிக்கவேண்டும் என கர்த்தருக்காக இரத்தசாட்சியாக மரிக்கவும் தன்னை ஆயத்தப்படுத்தினார். நம்மில் எத்தனைபேர் இந்த விதமான சிந்தையோடிருக்கிறோம். கர்த்தருக்குள் ஒரு குறைவுமில்லாமல் வாழ்கிறோம் என்று சாட்சி சொல்லவே விரும்புகிறோம். ஆனால் பவுல் தான் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கு அடையாளமாக எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டதாகவும், அவைகளைக் குப்பையாக எண்ணுவதாகவும் குறிப்பிடுகிறார். நாம் ஆண்டவர் இயேசுவோடு பாவங்களுக்கு செத்து ஞானஸ்நானத்திலே உயிரோடு எழுப்பப்படுகிறோம். அதன் பின்பு இவ்வுலகில் கர்த்தருக்குள் ஜீவன் உள்ளவர்களாக வாழ்கிறோம். அந்த வாழ்க்கையில் அநேக போராட்டங்கள் வருகிறது அதில் சிலர்



**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்
ஆம் எனில் ☑ குறியிடவும்



**3. மூப்பர்களுக்கு இருக்கவேண்டிய தகுதி என்ன?** ***தற்சோதனை பகுதி - 3***

1. குற்றஞ்சாட்டப்பட்டவராயிருந்தாலும் பரவாயில்லை ☐ வசன ஆதாரம் -

---

2. குற்றஞ்சாட்டப்படாதவராயிருக்க வேண்டும் ☐ வசன ஆதாரம்-

---

3. பல மனைவிகள் இருந்தாலும் பரவாயில்லை ☐ வசன ஆதாரம்-

---

4. ஒரே மனைவியை உடையவராயிருக்க வேண்டும் ☐ வசன ஆதாரம்-

---

5. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற தேவையில்லை ☐ வசன ஆதாரம்-

---

6. புறம்பானவர்களால் நற்சாட்சிபெறவேண்டும் ☐ வசன ஆதாரம்-

---

7. சொந்தக் குடும்பம் எப்படியும் இருக்கலாம் ☐ வசன ஆதாரம்-

---

8. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்தவேண்டும் ☐ வசன ஆதாரம்-

---

9. நூதன சீஷனாயிருந்தாலும் பரவாயில்லை ☐ வசன ஆதாரம்-

---

10. நூதன சீஷனாயிருக்கக்கூடாது ☐ வசன ஆதாரம்-

---

**இது உங்களுக்கான நற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறிந்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

# கேள்வியும் வசன ரீதியான பதிலும்

1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)




6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)

***நீங்கள் இவ்விதழின் வாசகரா?***
***அப்படியானால் உங்களுடைய பங்கு என்ன?***

- மற்றவர்களுக்கு இவ்விதழை அறிமுகம் செய்யலாம்.
- வாசகர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு சந்தா செலுத்தலாம்.
- உங்கள் பகுதியில் சபையாக கூடி இச்செய்திகளை வாசித்துக்காட்டலாம்.
- இவ்விதழின் ஆசிரியரை அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்தலாம்.
- இவ்விதழின் வளர்ச்சிக்காக ஜெபிக்கலாம்.
- உங்களுடைய கருத்துக்களை அவ்வப்போது தெரியப்படுத்தலாம்.
- மாதம் ஒரு முறை அலுவலகத்திற்கு வந்து உதவிடலாம்.

9443558041 / 6379350509



நிலைத்திருக்கக்கூடாமற்போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படியாயினும் நாம் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கு வரக்கூடிய நஷ்டங்களை குப்பையாக எண்ணுகிறேன் என்று சொல்லி போராடும்போது நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்கிறவர்களாக இருப்போம். கர்த்தருக்குள் ஒவ்வொருநாளும் புதியவைகளே. பழையவைகள் குப்பைகளாகவே போகின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இஸ்ரவேலரைப்போல பின்னிட்டுப் பார்ப்போமானால் எகிப்துக்குப்போவதே மேல் என்று கருதுவோம்.

மேலும், பவுல் "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்" என்கிறார் (பிலி.3:12). கிறிஸ்தவ ஓட்டம் என்பது அது மரணபரியந்தமும் ஓடுகிற ஒரு ஓட்டம். அதில் ஒருவர் நான் ஓடிமுடித்துவிட்டேன் என்று சொல்லி ஓய்வு எடுக்கமுடியாது அல்லது நான் தேர்ச்சியடைந்துவிட்டேன் என்றும் சொல்லிவிடமுடியாது. இதையே பவுல் நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் என்று குறிப்பிடுகிறார். அநேகர் தங்களைத்தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள் அல்லது தேற்றிக்கொள்ளுகிறார்கள். அது முடிவான இரட்சிப்பை நமக்கு கொடுக்காது. பவுலைப்போல அந்த நோக்கத்தை தெரிந்துகொண்டு தொடர் ஓட்டத்தில் ஓடவேண்டும். அதுவும் ஆசையாய் தொடரவேண்டும். சிலர் விருப்பமில்லாமல் மற்றவர்களுக்காக ஓடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் ஓட்டத்தில் வெற்றியடையமுடியாது. அதில் ஒரு விருப்பம் வேண்டும். அப்பொழுதே மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடையமுடியும். பவுல் ஓடுகிற ஓட்டத்தில் ஒரு நோக்கம் இருந்தது; "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்" என்கிறார் (பிலி.3:14). நாமும் அந்தப்படியாகவே அழைக்கப்பட்டுள்ளோம். பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக ஒவ்வொருநாளும் நாம் போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளையும் பார்ப்போமானால் இலக்கை நோக்கி போகமுடியாது. உலகமும் அதின் ஆசை இச்சைகளும் நம்மை பந்தயப்பொருளை இழக்கச் செய்திடும். தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்ற எண்ணம் நம் முன் எப்பொழுதும் இருக்கவேண்டும். அது உங்களை விட்டு பிரியாதிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்.

"ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்" என்று பிலி.3:15-ல் படிக்கிறோம். அன்பானவர்களே, கர்த்தருக்குள் நிலைத்திருக்கிற நீங்கள் இந்த சிந்தையாயிருங்கள். பவுலைப்போல நோக்கத்தை உடையவர்களாக இருக்கப் பிரயாசப்படுங்கள். பழைய ஏற்பாட்டு காலத்திலே கர்த்தரைப்பின்பற்றினவர்களில் சிலர் வீழ்ந்துபோனதை அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு நினைப்பூட்டி எழுதுகிறார்; "அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரே நாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். இவைகளெல்லாம்

திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி.10:8-12). இன்றைக்கு சிலர் தங்களை கிறிஸ்துவுக்குள் திடமாக நிற்கிறவர்களாகவும் மற்றவர்களைப் பார்க்கும்போது அவர்களெல்லாம் இரட்சிக்கப்படுவது கடினம் என்று எண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இங்கே புத்தி சொல்லி எச்சரிக்கிறார்.

தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். பேதுரு அன்று இராவிலே இயேசுவை நோக்கி; ஆண்டவரே காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அந்தப்படியே அவன் இயேசுவை மறுதலித்தான். அவனுக்கு வந்த சோதனையில் அவனால் வெற்றிகொள்ளமுடியாமற்போயிற்று. அதைப்போல தன்னை நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்க பவுலைப்போல ஒரு தீர்மானத்தை எடுங்கள். அப்பொழுதே நீங்கள் முடிவு பரியந்தமும் நிலைத்திருந்து உங்களுக்கு வரும் சோதனைகளை மேற்கொள்ளவும், கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாக வாழவும் முடியும். கர்த்தருக்குள் நிலைத்திருந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கு மேலும் வேதாகமம் கொடுக்கும் ஆலோசனை என்ன?**

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ.2:6,7). நூதனமான போதனைகளில் அநேகர் சிக்கிக்கொண்டு வளர்ச்சியடைய முடியாமற்போய்விடுகிறார்கள். நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேதாகமத்தின் போதனை போதுமானதாக இருக்கிறது. இயேசுவின் இரண்டாம் வருகை வரை இதைப் படித்து அந்த வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து அதன்படி வாழ நம்மை அர்ப்பணித்தால் போதும். அதையே மேலுள்ள வசனத்தில் பவுல் கொலோசெய சபையாருக்கு எழுதுகிறார். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், என குறிப்பிடுகிறார்.

ஞானஸ்நானத்தில் ஒப்புக்கொடுக்கிற அனைவருமே சரியானபடி அன்று ஒப்புக்கொடுக்கிறார்கள். அப்படியே இயேசுவிற்குள் வேர்கொண்டவர்களாக வளரவேண்டும். ஆனால் நாளடைவில் தங்களுடைய நம்பிக்கையை போதகர் மீதும், மற்ற விசுவாசிகள் மீதும் வைத்து பின்மாற்றமடைகிறார்கள். மேலும், பவுல் சொல்லுகிறார்; அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக என்கிறார். போட்டையும் கொடுத்து துடுப்பையும் கொடுத்து, அக்கரைக்குப்போங்கள் என்றால் போகவேண்டியது தானே. ஐயோ தனியாக எப்படிப்போவது என்றால் எப்படி? சிந்தியுங்கள் செயல்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



விசுவாசித்தனர். ஆகவே அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறும்படி சொல்லப்பட்டனர்.

சவுல் விசுவாசமும் மனமாற்றமுமுள்ள மனிதன் ஆகவே அவன் ஞானஸ்நானம் மட்டும் பெற்று பாவங்கள் போகக் கழுவப்படவேண்டுமென்று சொல்லப்பட்டான். அவர்கள் வித்தியாசமான நிலைகளிலிருந்தார்கள். சரியாகச் சொன்னால் ஒரே பதில்தான் அதன் வித்தியாசமான பகுதிகள் பேசப்பட்டுள்ளது.

எல்லா நிலைகளும் முக்கியமானவைகளே எதையாவது விட்டு விடுவதோ அல்லது அவசியமற்றதைச் சேர்ப்பதோ தேவனுடைய தெளிவான கட்டளைகளை மாற்றுவதாகும்.

நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

ஏனெனில் உங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலா.3;26,27).

ஞானஸ்நானத்திலே நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறோம்.

ஞானஸ்நானத்திலே நாம் அவருடைய ராஜ்யத்தின் அங்கங்களாகிறோம் (யோவா.3:5)

ஞானஸ்நானத்திலே நாம் அவருடைய சரீரமாகிய சபையின் அங்கமாகிறோம் (1கொரி.12:13; கொலோ.1:18).

பெண்கள் பகுதி

## ராகாப் - RAHAB

-Paula Bates



**ராகாபினுடைய விசேஷித்த குணங்கள்:**

- சுறுசுறுப்புள்ளவள் - சணல் நெய்கிறவள்
- தன் குடும்பத்தை நேசித்தாள் - அவர்களுக்கு என்ன நடக்கும் என்ற கவலை கொண்டவள்.
- புத்திசாலியும் விழிப்புமுள்ளவள்.
- துணிச்சலுள்ளவள்.
- தேவனை விசுவாசித்து ஆபத்து கடந்து போகும் மட்டும் தன்னுடைய குடும்பத்தாரை தன் வீட்டில் தங்க வைத்திருந்தாள் (தன்னைச் சுற்றிலுமிருந்த மதில்களும் நகரமும் அழிக்கப்பட்டிருந்த போதிலும் கூட).

அவள் மற்ற ஜனங்களோடு மதில்களில் உட்புறம் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும். அது பாதுபாப்பான இடமாகக் காணப்பட்டதா? எரிந்து போனது.

அவள் தன் குடும்பத்தாரோடுகூட சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்தவளாயிருந்தாள். அவள் விசுவாசித்தபடி உறுதியாக தங்கியிருந்தாள்.

இஸ்ரவேலர் அவளிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்களாயிருந்தாலும் கூட அவள் தேவனோடும் அவருடைய ஜனங்களோடும் குடியிருந்தாள்.

- புதுவருடத்திற்காக...
- புதிய தீர்மானங்களுக்காக...
- புதிய ஆட்சியார்களுக்காக...

ஜெபியுங்கள்

விழித்திருந்து ஜெபியுங்கள்



எழுந்தார் என்பது பொய்யும் மூடத்தனமாயிருக்கிறதென்றும் சந்தேகமின்றி சவுல் போதித்தான். அது கூடாத காரியம்.

2. பவுலிடம் இயேசுவானவர் பேசியபோது அவர் உயிருள்ளவர் என்பதை நிரூபித்தார். அவர் உயிருடன் இருந்தபடியால் அவர் மேசியாவாக இருக்க வேண்டும். இப்பொழுது ஸ்தேவான் இதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்று சொன்னது சரிதான் என்பதைப் பவுல் அறிந்து கொண்டான். அவன் இயேசுவானவரைக் கண்டான்.

இயேசுவானவரின் பதிலைப் பாருங்கள். எழுந்து நகரத்துக்குள்போ, அங்கே நீ செய்யவேண்டியது இன்னதென்று சொல்லப்படும் என்றார் (அப்.9:6).

பவுல் பார்வையற்றவனாய் மூன்று நாள் புசியாமலும் தண்ணீர் குடியாமலுமிருந்தான். இப்பொழுது சவுல் விசுவாசித்த மாத்திரத்திலேயே இரட்சிக்கப்பட்டிருந்தால் சந்தோஷமாய் இருப்பதே உணர்வாக இருந்திருந்தால் பின்பு ஏன் அடுத்த மூன்று நாட்கள் சவுல் பரிதாபமாக இருக்கவேண்டும்?

4. அனனியா அவனிடம் சொன்னார். நீ தாமதிக்கிறதென்ன? எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு (அப்.22:16). பிரிவினைப் பிரசங்கியாரிலிருந்து அனனியா வேறுபட்டவர். இவர்கள் எதைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்களோ அதை அவர் (அனனியா) செய்யும்படி சொல்லுகிறார். கடைசியாக நீங்கள் எப்போது பில்லிகிரஹாம், பேட் ராபர்ட்சன், அல்லது கென்னத் கோப்லேண்ட் அல்லது தொலைக்காட்சிப் பிரசங்கியார்களிலே பிரபலமானவர்களை இப்படி சொல்லக் கேட்டிக்கிறீர்கள்?.

1. கவனியுங்கள் ஜெபத்தைப் பற்றி ஒருவார்த்தை கூட சொல்லப்படவில்லை. அனனியா பவுலிடம் ஜெபிக்கச் சொல்லியிருந்தால் அதற்கு பதிலாக என்று தான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? நீங்கள் நினைக்கிறீர்கள் என்று கேட்டிருக்கக்கூடும்.

2. இன்று மிகப் பெரும்பான்மை பிரசங்கியார்கள் சொல்லுகிறதைத் தான் பவுல் செய்து கொண்டிருந்தார். ஆனாலும் இரட்சிக்கப்படவில்லை.

3. அவர் தவறான ஜெபத்தை செய்து கொண்டிருந்தாரானால் அனனியா ஏன் அவனிடம் என்ன ஜெபிக்க வேண்டுமென்று ஏன் சொல்லவில்லை?

4. ஒரு வயதான பெண்மணிக்கு, பாவியின் ஜெபம் வேதத்தில் காணப்படவில்லை என்று சொன்னேன். அது இல்லை தான் ஏன் அது இல்லை என்று ஆச்சரியப்படுகிறேன்? என்று அவர் சொன்னார். அது காணப்படவில்லை ஏனென்றால் அது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியல்ல தேவனைத் தொழுதுகொள்வது என்பது ஏதோ கர்த்தாவே, என்னை இரட்சியும் என்று சொல்வது மட்டுமல்ல. அது கர்த்தருடைய சித்தத்துக்கு முற்றிலும் கீழ்ப்படிவது என்று அர்த்தம்.

**நிறைவாக**

ஒரு கேள்விக்கு ஏன் வெவ்வேறு பதில்கள்? பதில் சொல்லும் நபரைப் பொறுத்தது.

சிறைச்சாலை அதிகாரி ஒரு அவிசுவாசி ஆகவே அவன் விசுவாசிக்கும்படி சொல்லப்பட்டான். விசுவாசத்தை அவனுள் வளர்க்கும்படி சொல்லப்பட்டான் பின்பு ஞானஸ்நானம் பண்ணப்பட்டான். பெந்தேகோஸ்தே நாளில் மக்கள்



# கிறிஸ்துவுக்குள்

## In Christ

*-J.C.Choate*

வேதாகமம் நாம் பாவமற்ற வர்களாக சரீரப்பிரகாரமாகப் பிறந்திருக்கிறோம் என்று போதிக்கிறது. நாம் பரிசுத்தமுள்ளவர்களும், கபடற்றவர்களும், காக்கப்பட்டவர்களுமாக இருக்கிறோம். ஆனால் நாம் வயது வந்தவர்களாக, பொறுப்புடைய வயதை அடைந்திருக்கையில், நல்லது கெட்டதை அறிந்து, இவ்வாறாக பாவிகளாக மாறி (ரோம.3:23), நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கும்படிக்கு இப்போது கட்டாயமாக மனந்திரும்பி சிறு குழந்தைகளைப் போல மாறவேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்.18:3).



பாவிகளாகிய நாம் இரட்சிக்கப்படவேண்டியது அவசியம் ஏனென்றால் நாம் தேவனுடைய கட்டளையை மீறினவர்களாயிருக்கிறோம் (1யோவா.3:4). பவுல் நமக்கு "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ ...... நித்தியஜீவன்" (ரோம.6:30) என்று நினைப்பூட்டுகிறான்.

ஆனால் நாம் எப்படி பாவத்திற்கும் மரணத்திற்கும் தப்பித்துக் கொள்ளமுடியும்? நாம் எவ்வாறு மன்னிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, இரட்சிப்பின் நிலைமைக்கு மாற்றப்பட முடியும்? நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவோமானால் கிறிஸ்துதாமே நம்மை இரட்சிப்பார் என சொல்கிறார் (மாற்.16:16). பேதுரு திரளான ஜனக்கூட்டத்திற்குப் பிரசங்கித்தபோது, அவர்கள் விசுவாசிகளாகி, தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று அறிய விரும்பினார்கள். அவன் அவர்களிடத்தில் அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றான் (அப்.2:38). இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டார் (அப்.2:47) என அறிவுறுத்தப்படுகிறோம்.

நம்மை இவ்வுலகத்திலிருந்து விடுவித்து கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் கொண்டு செல்லுகிறது ஞானஸ்நானம். இதுவே நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் கடைசி படியாகும் தேவனிலும், கிறிஸ்துவிலும் விசுவாசத்தின் மூலமும் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நமது விசுவாசத்தினால் அறிக்கையிடுவதின் மூலம் இது நடைபெறவில்லையென்றால் ஞானஸ்நானத்தினால் மட்டும் ஒன்றும் பிரயோஜனமில்லை, நிச்சயமாக, இது நமக்கு ஒன்றும் செய்யாது. அப்புறம் ஞானஸ்நானப்படுத்தப்படுகையில் நம்முடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு, கர்த்தருடைய கற்பனைகளை நிறைவேற்றுவதனால் ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என

அறிவுறுத்தப்படுகிறோம் (1பேது.3:21). தண்ணீர் தானே நம்மை இரட்சிக்கிறதில்லை ஆனால் நாம் கிறிஸ்துவின் சித்தப்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால் கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார். மேற்கண்ட வசனத்தில் பேதுரு கூறுகிறபடி ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் அல்லது ஸ்நானம்பண்ணுவதற்காக இல்லாமல் தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை யாயிருக்கிறது.

ஒருவன் தேவன், தன்னை செய்யும்படி கேட்டுக்கொண்டதைச் செய்யாமலிருக்கையில் தேவனுக்கு முன்பாக அவன் எவ்வாறு நல் மனசாட்சியினைக் கொண்டவனாயிருக்க முடியும்? என வினா எழும்புகிறது. நிச்சயமாக இது இயலாது, எனவே தான் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்புகின்ற விசுவாசியே ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயிருக்கிறது.

இன்னொரு வழியில் இதை ஆராய்கையில்: ஒருவன் வசனத்தின்படி ஞானஸ்நானம் பெறுகையில் தண்ணீருக்குள் அடக்கம்பண்ணப்பட்டு, புதிய ஜீவியம் ஜீவிக்கும்படி தண்ணீரிலிருந்து வெளியே கொண்டுவரப்படுகிறான் (ரோம.6:3,4) அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் புதிய பிறப்பினை அனுபவித்து, ஆவியிலே மறுபடியும் பிறந்தவனாயிருக்கிறான் (யோவா.3:3-5). பவுல் இதை "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17) என விளக்குகிறான்.

இரட்சிப்பையும் புதுச்சிருஷ்டியாய் இருப்பதையும் கொண்டிருப்பதற்கு, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் மேலும் அதுவே கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு நீதியான ஒரே வழியாய் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோம.6:3,4) என்றான்.

பவுல், 2கொரிந்தியர்5:17-ல் சொன்னது என்னவென்றால், புதிய சிருஷ்டியாயிருப்பதன் விளைவு புதிய ஜீவியம் ஜீவிப்பது அல்லது கிறிஸ்துவுக்குள் புதிய ஜனமாயிருப்பது என்பதாகும். மறுபடியும் அவன், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா.3:26,27) என்றான்.

உதாரணமாக, ஒருவன் ஒரு சட்டையை அணிகிறபோது, அவன் சட்டைக்குள்ளிருக்கிறானா அல்லது சட்டைக்கு வெளியே இருக்கிறானா? நிச்சயமாக அவன் சட்டைக்குள்தான் இருக்கிறான். அவ்வாறே ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபோது, அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான்.




# நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?
## What Must I Do To Be Saved?

பாடம் - 30

*-Jerry*

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**




அவர்கள் அழைத்து சென்றனர். ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எங்கே?

ஞானஸ்நானத்துக்குப்பின்பு அவர்கள் சென்ற வீட்டிற்குள் அல்ல. எப்பொழுது? அந்த நேரமே. முக்கியமில்லாத ஒன்றானால் ஏன் இவ்வளவு அவசரப்படவேண்டும்?

தர்சுப்பட்டணத்தானாகிய சவுல் அடுத்த கேள்வியை கேட்கிறார். ஆகவே அவர் நடுங்கித் திகைத்து கேட்கிறார். ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? (அப்.9:6).

அவருடைய மனமாற்றம் மற்றும் அப்போஸ்தல ஊழியத்துக்கான அழைப்பைப்பற்றி அப்.9:22 மற்றும் 26ம் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் மிகவும் பக்தியுள்ளவன். அவன் தனது மார்க்கத்தைப்பற்றி மிகவும் மனச்சாட்சியோடு நடந்துகொண்டவன்.

கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினவனாக பவுல் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டார்.

1. ஸ்தேவான் மீது கல்லெறிந்தவர்களின் உடைகளை அவன் வைத்திருந்தான் (பாதுகாத்தான்) அப்.7:58).

2. பின்பு அவன் தனிப்பட்ட முறையிலே சபையை துன்பப்படுத்தினான்.

சவுல் வீடுகள் தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய் காவலில் போடுவித்து, சபையை பாழக்கிக்கொண்டிருந்தான். (அப்.8:3).

3. பின்பு பவுல் சபையைத் துன்பப்படுத்தியபோது தான் தேவனுக்கு செய்த எதிரான கொடுமையான செயல்களை ஒத்துக்கொள்ளுகிறான் (அப்.26:9-11).

4. ஆனால் அவனுடைய மனச்சாட்சி அவனை குற்றப்படுத்தவில்லை. அவன் சரியாகத்தான் செய்கிறான் என எண்ணினான். நம் உணர்வுகள் நம்மை நடத்தும் பாதுகாப்பான வழிகாட்டியல்ல என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அந்த ஒளி அவனைச் சுற்றிலும் பிரகாசித்தது இரட்சிக்கப்பட்டதற்கான அறிகுறி அல்ல.

4ம் வசனம் இயேசுவின் கேள்வி ஆகும். பவுலுடைய கேள்வியும் கர்த்தருடைய பதிலும் 15 ம் வசனத்தில் உள்ளது. பவுல் எப்படித் தன்னை அப்போஸ்தலப் பட்டத்துக்கு தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லவே பவுலுக்கு இயேசு தரிசனமானார். இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டுமென்று சொல்வதற்காக அல்ல.

இதைக் கர்த்தர் பேசியதிலிருந்து சவுல் ஒரு விசுவாசி. நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்ற கேள்வி அவன் விசுவாசித்தான் என்பதைக் காண்பிக்கிறது.

1. இயேசுவானவரை போலியானவரென்றும் அவர் மரித்தோரிலிருந்து

சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்" (லூக்.21:3-4). மனிதன் அளந்து கொடுக்கிறதைப்போல, இவள் ஏதோ சில பெரியதும் குறிப்பிடத்தகுந்ததுமான ஒன்றை கொடுக்கவில்லை, ஆனால் தேவன் அளக்கிற விதமாக, இவளுடைய காணிக்கை எல்லாரைக் காட்டிலும் பெரியதும் மதிப்பு மிகுந்ததும் குறிப்பிடத்தகுந்ததுமாயிருந்தது.

**இங்கே நம்முடைய அனுதின ஜீவியத்தில் மற்றவர்களுக்காக செய்யக்கூடிய சில காரியங்கள் உண்டு, இவைகள் காண்பதற்கு பெரியவைகள் அல்ல, ஆனால் அவைகள் தேவபக்திக்கான மாதிரியின் விலையேறப்பட்ட ஒரு வாழ்வினை அதிகப்படுத்துகிறது**

- கதவுகளை மற்ற ஜனங்களுக்காக திறந்து வையுங்கள்.
- தரையில் குப்பை கிடப்பதைக் காணும்போது நீங்கள் அதை எடுத்து அப்புறப்படுத்துங்கள்.
- அதிக சுமையை சுமக்கிற மற்றவர்களுக்கு உதவிடுங்கள்.
- யாரேனும் பிரச்சனைகளில் இருந்தால் "உதவிட" முயற்சிக்காமல் அவர்களுக்கு செவிசாயுங்கள்.
- பலசரக்குகளை சுமந்து வருகின்ற உன் பெற்றோருக்கு உதவிடு.
- உன் ஆசிரியரிடமும் உன் நண்பரிடமும் மரியாதையுடன் பேசுங்கள்.
- மிகுந்த கவனத்துடன் உன்னுடைய ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய அறிவுரைகளுக்கும் கீழ்ப்படியுங்கள்.
- உன்னுடைய வீட்டுப்பாடங்களை சிறப்புடனும் குறித்த காலத்திலும் செய்து முடி.
- சபை தலைமைத்துவம் நியமிக்கிற ஆராதனை நிகழ்வில் கலந்துகொள்.
- உன்னுடைய வாலிபர் கூட்டத்தில் கூடுமானவரை கலந்துகொள்.
- உங்கள் பிராந்திய சபைக்கு வருகிற விதவை, மனைவியை இழந்தோர், மறுதாரம் கொள்ளாதோர் அல்லது மருத்துவமனையில் இருக்கும் யாரோ ஒருவரை சந்தியுங்கள்.
- தேவைப்படுகிற உன் நண்பனுக்கு வேதாகமத்தைக் கொடு.
- நீ எப்படி இரட்சிக்கப்பட்டாய் என்று மற்றவரிடம் கூறு.
- உன் நண்பர்களுக்கு முன் உன் பெற்றோரிடம் மரியாதையுடன் நடந்து கொள்.

இது ஒருவர் செய்யலாம் என்பதற்கான ஓர் முழுமையான பட்டியல் அல்ல, ஆனால் இது ஒரு ஆரம்பம். மேலும் நம் அன்றாட வாழ்வில் நம்மைச் சுற்றி இருப்போர் முன்பு ஒரு நல்மாதிரியாக இருப்பதற்கு ஒருவர் செய்யும் உதாரணம் காட்டி விளக்கக்கூடிய செயல்பாடுகள் ஆகும். நீங்கள் வாழ்கின்ற இவ்வாழ்க்கையில் தேவன் உங்களையும் உங்கள் நண்பர்களையும் நீங்கள் ஒருபோதும் கற்பனை செய்திராதபடி இவ்விதமாக ஆசீர்வதிப்பார் என்பதை நினைத்துப் பாருங்கள். மேலும் நீங்கள் உண்மையாகவே தேவன் யார் என்பதை மற்றவர்களுக்குக் காட்டுவீர்கள், அவர்கள் நீங்கள் யாரைப் பின்பற்றுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளுகிறபடியால் அவர்களும் தேவனை மகிமைப்படுத்த வருவார்கள்.

**தொடர்புடைய இவ்வேத வாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்:**

மத்தேயு 5:16, லூக்.21:1-4, யோவா.13:15, அப்.9:36-43, ரோம.10:6-8, 1கொரி.11:1, பிலிப்.2:3-9, 1பேது.2:21.



வெளியே அல்ல. இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய ஒரு குழந்தையாக இருக்கிறான், கிறிஸ்துவுக்கு வெளியே அல்ல.

ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு சமயத்தில் இரட்சிக்கப்பட்டு, பிறகு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் எனக் கூறுகிறவர்கள் கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது கிறிஸ்து இன்றி இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பர். இது எவ்வாறு கூடும்? இரட்சிக்கப்படும்படிக்கு ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும், அது கிறிஸ்துவுக்குள் ஒருவனை கொண்டுசெல்லும் ஞானஸ்நானம் என வேதவாக்கியங்கள் போதித்தால், ஞானஸ்நானத்திற்கு முன்பாக ஒருவன் இரட்சிக்கப்படுவது என்பது இயலாததாயிருக்கும்.

மீண்டும், பவுல் 1கொரிந்தியர்12:13-ல் ஒரே சரீரத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்கிறான், மேலும் கொலோசெயர்1:18 சரீரமே சபை என்கிறான். எபேசியர்1:22,23,-ல் சபை சரீரமாயிருக்கிறது எனக்காட்டுகிறான் மேலும் கடைசியாக எபேசியர்4:4-ல் ஒரே ஒரு சரீரம் எனக்குறிப்பிடுகிறான்.

ஆனால் ஒரே சரீரமே சபையானால் அதன் அர்த்தம் ஒரே சபை மாத்திரமே உண்டு என்பதாகும், மேலும் நாம் அந்த சரீரத்திற்குள்ளாக அல்லது சபைக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால், பிறகு சபைக்குள் பிரவேசிப்பதற்கு ஒரே வழி மட்டுமே உள்ளது: அது ஞானஸ்நானம் பெற்றிருப்பதன் மூலமே! இது எல்லாம் மிகவும் நியாயமானது!

அனைத்து கருத்துக்களையும் ஒன்றிணைக்கையில், நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிகையில், நாம் கிறிஸ்துவுக்குள் மேலும் அவருடைய சபைக்குள் பிரவேசிக்கிறோம், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கின்ற அதே வேளையில் கிறிஸ்து நம்மை தம்முடைய சபையில் சேர்க்கிறார்.

சரீரப்பிரகாரமான உறவில், அதாவது, ஒரு முறை சரீரப்பிரகாரமான ஒரு குடும்பத்தில் நாம் பிறந்திருக்கையில், நாம் அதில் பிறவாதவர்கள் போல் இருக்கமுடியாது. நாம் நமது குடும்பத்தின் விசுவாசமிகுந்தவராகவும், வேலையில் கருத்துள்ள அங்கத்தினனாகவும் அதனுடைய பலன்களைப் பெறுகிறவர்களாக அல்லது ஒருவேளை நாம் வாரிசுரிமையை இழக்கின்ற வழியில் வாழ்கிறவர்களாயிருக்கலாம். ஆனால் நாம் எப்போதும் நம்முடைய தகப்பனுக்கும் தாயுக்கும் மகன் அல்லது மகளாக இருப்போம்.

இதே தான் உண்மையான ஆவிக்குரிய ரீதியிலுமுள்ளது. ஒரு முறை நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபை அல்லது குடும்பத்திற்குள் பிரவேசித்து, எப்போதும் நாம் கிறிஸ்துவுக்குள்ளிருப்போம், மேலும் நாம் எப்போதும் அந்த குடும்பத்தினுடைய அங்கத்தினர்களாக இருப்போம் ஆனால், நாம் விசுவாசமுள்ளவர்களாகவோ விசுவாசமில்லாதவர்களாகவோ இருக்க இயலும். ஆனால் தேவனுடைய பிள்ளையாக இருந்து, மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கையில், கர்த்தர் நமக்கு ஜீவகிரீடத்தைக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார் (வெளி.2:10).

நாம் விசுவாசமற்றவர்களாயிருந்தோமானால் குடும்ப பிராந்திய சபையின் மூலம் இவ்வுலகில் ஒருவேளை நட்புறவு கொள்ளாதவர்களாக இருந்து

விட நேரிடும். கடைசியாக நாம் மனந்திரும்பாவிட்டால் நித்திய நித்தியமாக இழந்தவர்களாகி விடுவோம் (மத்.25:46). நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்புவோமானால், கர்த்தருக்குச் சொந்தமானவர்களுக்கு வரக்கூடிய பலன்களை மீண்டும் பெறுவோம். இந்த ஆவிக்குரிய குடும்ப உறவினை நன்றாகப் புரிந்து கொள்ளும்படிக்கு மனந்திரும்பிய மைந்தனின் கதையை லூக்கா 15-ல் வாசித்துப் பாருங்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? நீங்கள் அவருடைய சபை அங்கத்தினராயிருக்கிறீர்களா? நீங்கள் தேவனுடைய விசுவாசமிக்க பிள்ளையாயிருக்கிறீர்களா? இல்லையென்றால், இது துக்ககரமான உண்மை, நீங்கள் இழந்துபோன நிலைமையிலிருக்கிறீர்கள். தயவுசெய்து அதிக தாமதம் ஏற்படும் முன் கர்த்தரிடம் வந்து சேரும்படி அவருடைய அழைப்பிற்குச் செவிசாயுங்கள்.

❶ தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானம் - எபே.3:9
❷ கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய... - ரோம.6:3
❸ கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பினார் - எபே.2:7



❹ கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் - எபே.2:13
❺ நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டோம் - எபே.2:10
❻ ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான் - 2கொரி.5:17
7 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக... - ரோம.6:11

## தெரிந்துகொள்வோம் சிலந்திப் பூச்சி

-K.R.K.Ravi Asir

▶ பொதுவாக விலங்கினங்களில் பெண்ணைவிட ஆண் விலங்குதான் அதிக எடை தோற்றம் கொண்டதாக இருக்கும். ஆனால் சிலந்தியில் ஆண் பூச்சிகளை விட பெண்பூச்சிகளே உருவம், எடை இரண்டிலுமே பெரியதாக இருக்கும்.

▶ சிலந்தியின் வயிற்றின் அடியில் இரண்டு சுரப்பிகள் உள்ளன. இவற்றிலிருந்து சுரக்கும் திரவத்தைக் கொண்டுதான் சிலந்தி வலை பின்னுகிறது. இந்த திரவத்தின் மீது காற்றுப்பட்டவுடன் அது மெல்லிய கம்பிபோல் மாறிவிடுகிறது.

▶ இரண்டு சுரப்பிகளிலிருந்து வெளியேறும் திரவம் வேவ்வேறு தன்மைகள் கொண்டவையாக இருக்கின்றன.

▶ வீட்டுச் சிலந்திகள் வலைக்குள் இருந்து கொண்டுதான் இரைக்காகக் காத்திருக்கும்.

▶ சிலந்திகளில் கடும் விஷத்தன்மை கொண்டவைகள் உண்டு. அவை பிளாக் விடோ, பிரவுன் ரெக்கன்ஸ் என்னும் சிலந்திகள்.





## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends

-TVOTI



**ஒரு நல்ல மாதிரியாக இருத்தல் உன்னுடைய நண்பர்களுக்கு உதவுகிறது**

**பிரிவு 1, பாடம் -7**

Being a Good Example Helps Your Friends

**- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

**இதை நாம் எவ்வாறு பிரயோகிக்கிறோம்?**

கிறிஸ்து நாம் செய்யும்படி நம்மிடத்தில் எதிர்பார்க்கிறதைச் செய்வதற்கு இது ஒரு நீண்ட விசேஷமானவற்றின் மிக பெரிய வேலைகளை செய்யவேண்டுமென்பது அல்ல. மற்றவர்களுக்காக ஆழமான வலிமைமிக்க ஆற்றினைக் கடந்து செல்வதோ அல்லது கடலில் உலக முழுவதையும் சுற்றி வருவதையோ நாம் பெற்றிருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் நம்முடைய ஜீவித்தில் சிறு காரியங்களைச் செய்வதன் மூலம் தேவனுக்கென்றும் மற்றவர்களுக்கென்றும் நமது அன்பை நடப்பிக்கின்றோம். உண்மையான ஜீவியம் ஜீவிப்பதே ஒரு நல்மாதிரியை ஏற்படுத்துவதற்கான சிறந்த வழியாக இருக்கிறது. பவுல் ரோம.10:6-8ல் சொல்வதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

**விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி; இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே" என்றார்.**

கிறிஸ்து ஏற்கனவே தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்தபோது மாபெரும் நித்திய கிரியையை நமக்காக செய்திருக்கிறார். நம்முடைய விசுவாசமோ அவருடைய ஜீவியத்தைப் பிரதிபலிப்பது மட்டுமே ஆகும். தேவனுடைய வார்த்தை நாம் எப்படி வாழ வேண்டுமென நமக்குக் கற்பிக்கிறது. அவ்வாறாக ஜீவிக்கும்போது, நாம் மற்றவர்களுக்காக நல்மாதிரியை முன் வைக்கிறோம்.

அப்போஸ்தலர் 9:36-43ல் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் பின் வைத்துப்போன மாதிரியைப் பாருங்கள். வேதம் அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள் என்கிறது (அப்.9:36). அவள் செய்த நற்கிரியைகளில் சில, அவள் விதவைகளுக்கென்று செய்திருந்த அங்கிகளும் வஸ்திரங்களுமாகும் (அப்.9:39). இவைகள் கீர்த்தியின் மாபெரும் கிரியைகள் அல்ல, ஆனால் தேவனிடத்தில் கொண்டிருந்த அவளுடைய நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் சாதாரண கிரியைகளாகும். இப்பேர்பட்ட ஜீவியமே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற ஜீவியம், இவ்வாறாக ஜீவிக்கும்போது மற்றவர்களுக்கு நாம் மாதிரியை முன் வைக்கிறோம்.

ஒரு விதவை தேவனுக்கென்று தனக்குண்டாயிருந்த இரண்டு காசை கொடுத்ததை நினையுங்கள் (லூக்.21:1-4). லூக்கா, இயேசு ஜனங்கள் எவ்வாறு கொடுத்தார்கள் அதன்பின் ஒரு விதவை எவ்வாறு கொடுத்தாள் என்பதை கவனித்துக் கொண்டிருந்தார் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். இயேசு, "இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச்

## ஆசிரியர் கடிதம்

வாசகர் அனைவருக்கும் நம் ஆண்டவர் இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள்.

நமது மாத இதழ் புதிய வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கிறது. தற்போது 5000 க்கும் மேலான வாசகர்களை பெற்று இருக்கிறது. இவ்விதழ் தொடர்ந்து வெளிவர ஊழைத்து வருகின்ற, ஜெபித்து வருகின்ற, தாங்கி வருகின்ற யாவருக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். சத்தியத்தை சத்தியமாகவே தேவ சித்தத்தின்படி வெளியிட்டு வருகிறோம்.

உங்கள் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் இவ்விதழை தொடர்ந்து அறிமுகம் செய்யுங்கள். அடுத்த ஆண்டுக்குள் 2000 புதிய வாசர்களை நாம் பெற்றுக்கொள்ளவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படவும் உதவிடுங்கள். உங்களுடைய வருட சந்தாவை புதுப்பியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன்
ஆசிரியர்

## பொது அறிவு சோதனை

1. பாலின் நிறம் வெண்மையாக இருக்க காரணம் என்ன?
அ)கரோடின் ஆ)கேசின் இ)ரெனின்
2. எவரெஸ்ட் சிகரத்தை சென்றடைந்த முதல் பெண்மணி யார்?
அ)விஜயலட்சுமி ஆ)ஜுங்கோ தபேய் இ)எஸ்தர்
3. உலகில் முதன் முதலாக பெண் வீராங்கனைகளை கொண்டு படை உருவாக்கிய நாடு எது?
அ)நியூசிலாந்து ஆ)தமிழ்நாடு இ)ஸ்காட்லாந்து
4. செல்களை ஆராயும் அறிவியல் பிரிவின் பெயர் என்ன?
அ)சைடாலஜி ஆ)ஆர்ணித்தாலஜி இ)சைக்கலாஜி
5. மணியாடர் மூலம் பணம் அனுப்பும் முறையை ஏற்படுத்திய நாடு எது?
அ)இந்தியா ஆ)அமெரிக்கா இ)பிரான்சு

விடைகள்: 1.ரெனின் 2.ஜுங்கோ தபேய் 3.நியூசிலாந்து 4.சைடாலஜி 5.அமெரிக்கா.

**இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.15 மணி முதல் 5.30 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

## நடப்புச்செய்திகள்

❒ தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிமாணவிகளுக்கு கராத்தே உள்ளிட்ட தற்காப்பு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது என்று பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

❒ ரஷ்யாவை சேர்ந்த கோபு என்ற பெண்மணி 1889 ஆம் ஆண்டு பிறந்துள்ளார். 129 வயதாகும் இவர் உலகின் மிக வயதான பெண்மணி என அறிவிக்கப்பட்டுள்ளார். மேலும நீண்ட நாள் வாழ்வதும் கூட கடவுள் கொடுக்கும் தண்டனை தான் என அந்தப்பாட்டி கூறியுள்ளார்.

❒ மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட உள்ள ஸ்மார்ட் அட்டை குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் செங்கோட்டையன் கூறியுள்ளார்.



பெண்கள் பகுதி

# அங்கே ஓர் ராஜ்யம்
## There is a Kingdom

என் சிநேகிதியே, அங்கே ஓர் ராஜ்யம்
பகல் அல்லது இரவு
காணப்படாத இடம் அது
இடைவெளி தூரங்கள்
அளவிடப்படாத இடம் அது
உணர்ச்சிகளின் மையமாகிய எந்த இருதயமும் தனியாக நடக்க முடியாது
கண்ணீரால் இன்னொருவரின் கண்களை நிரப்புகிற
உனது துயரத்தின்
பாரம் நிறைந்த இடம் அது
உனது சிரிப்பின் எதிரொலி
உதடுகளிலிருந்து வடிகிறது என்றென்றும் பிரியமே;
பிதாவினிடத்திற்கு
நீ தைரியமாய் கொண்டு செல்லும் ஒவ்வொரு கனவும்
வளர்கிறது இன்னொருவரின் இருதயத்திற்குள்
அந்த கரங்கள் பலத்துடன்
உதவுகிறது உனக்கு
தூரத்தில் இலக்குகளை நீ அடை வதைப் போல்;
வெற்றி அல்லது அழிவு இல்லா இடம் அது
காலத்தினால் நாசம் உருவாக்கப்படாத இடம் அது,
வறுமை அல்லது செல்வம்
அன்பின் மேன்மையை பாதிக்க முடியவில்லை
ஒருவர் கைக் கெம்பீரமாக
சிந்தையில் வைத்துள்ள இடம் அது
ஆண்டுகள் அதிவேகமாய் பறக்கையில்
ஆழமான அழகுடன் தகதகவென பிரகாசிக்கிறது
இளமை முழுதும் கடந்து போகையில்
மலையின் மேலே இருக்கும்
இரு இருதயங்கள்
வரப்போகும் முடிவினை ஆராயலாம்
பிரியமே, அங்கே ஓர் ராஜ்யம்
ஒரு சிநேகிதியின் இருதயதுடிப்பினுள்.

-Betty




# இயேசுவைப் பின்பற்றுங்கள்

## Follow Jesus

*-Glory Arjunan*




அன்பான சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவை பின்பற்றுங்கள் என்று உங்களை அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறேன். இன்றைய நாட்களில் எங்கு பார்த்தாலும் பிரச்சனைகள், வேதனைகள், துக்கங்கள், சமாதானமின்மை போன்ற பல காரியங்கள் ஜனங்களை அழுத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பலவீனப் பாண்டமாகிய ஸ்திரீகளோ அநேக பாரங்களையும் துக்கங்களையும் சுமக்கிறவர்களாகவே காலத்தைக் கழிக்கின்றனர். ஆனால் இயேசுவின் பிறப்பு துவங்கி மரணம் வரை சந்தோஷமும் சமாதானமும் உலகத்திற்குரிய நற்செய்தியாக இருக்கிறது. எனவே தான் இயேசுவைப் பின்பற்றும்படி உங்களை அழைக்கிறேன்.

உலகம் இயேசுவை புறக்கணிக்கிறது. இயேசுவின் பிறப்பின் செய்தியை தேவதூதன் கூறினபோது; "...பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2;10,11) என்றான். மேலும் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்.2:14) என வாசிக்கிறோம். இயேசுவின் பிறப்பு ஒரு குறிப்பிட்ட தேசத்தாருக்கோ, ஜனத்தாருக்கோ சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவரவில்லை. இது எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி அத்தோடு பூமியிலே சமாதானமும் எல்லா மனுஷர் மேலும் பிரியமும் உண்டாக்கும் நற்செய்தி ஆகும். இயேசுவை விசுவாசித்து அவரைப் பின்பற்றும் அனைவருமே இந்த ஆசீர்வாத்தை அளவில்லாமல் பெற்றுக் கொள்ளமுடியும்.

நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், அவரைத்தானே பின்பற்றுகிறோம் என்று நீங்கள் கூறலாம். நல்லது. ஆனால் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிற வண்ணமாக நாம் அவரைப் பின்பற்ற வேண்டும். ஏனோ தானோவென்று கிறிஸ்தவர்கள் என்ற பெயரைத் தரித்துக் கொண்டிருப்பதும், தவறான சபைக்குச் செல்வதும், வேதம் வாசிப்பதும், ஜெபிப்பதும் மட்டுமே அவரைப் பின்பற்றும் செயலாகாது. வேதம் கூறுகிறது; "பின்பு அவர் (இயேசு) ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (மாற்கு8:34) என்று இயேசு சொன்னார். நம்மை நாமே வெறுத்து, நம்முடைய பாடுகளை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்றுதானே பொருள். இதை அறியாத அநேக சகோதரிகள் ஆசீர்வாதங்களை மட்டுமே விரும்பி, சோதனை வரும்போது சோர்ந்து போகின்றனர். நாம் இன்னும் பாலை உண்ணும் குழந்தைகளைப் போல இருக்கவேண்டாம்.

முதலாவது நம்மை நாமே வெறுக்கக் கற்றுக்கொள்வோம். அப்படியென்றால் நம்மையே நாம் வெறுத்து இப்பூமியில் நாம் ஏன் வாழ்கிறோம் என்று சலித்துக் கொண்டு வாழ்வதல்ல. ஸ்திரீகளாகிய நாம் சதா இவ்வுலகத்தையும் அதின் இச்சையையும் அடைய



விரும்புவோமானால் நம்மால் நமக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசுவைப் பின்பற்ற முடியாது. நம்முடைய சுயநலத்துக்காக நாமும் நம்முடைய குடும்பமும் மாத்திரம் நன்றாக சுகித்து வாழவேண்டும் அல்லது பார்வைக்கு பக்தியாய் வாழ்தல் போன்ற இவ்வுலகத்திலுள்ளவைகளில் அன்பு கூருவோமானால் பிதாவின் அன்பினை நாம் இழந்துவிடுவோம். "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்' என்று 1யோவா.2:11ல் எழுதப்பட்டுள்ளது. எனவே இப்பேர்பட்ட காரியங்களை வெறுப்பதே நம்மை நாமே வெறுப்பதாகும். இப்படிச் செய்யும்போது தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளை நோக்கினவர்களாய் வாழமுடியும் (பிலி.2:4). இதில் தேவன் பிரியப்படுவார்.

இரண்டாவதாக, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று மாற்கு 8:34ல் வாசிக்கிறோம். தன் சிலுவை என்பது என்னவென்று நாம் அறிவோம். இவ்வுலகில் நமக்கு வருகிறதான கஷ்டங்கள், போராட்டங்கள், பாடுகள் போன்றவைகளே நம்முடைய சிலுவையாக இருக்கின்றன. ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயானவள் நிச்சயமாக சுகபோகமாக வாழமுடியாது. கிறிஸ்தவர்கள் என்றாலே ஆசீர்வாதங்கள் மட்டுமே அவர்களுக்கு இருக்குமென்று சொல்லி பலர் தங்களை வஞ்சித்துக்கொள்கின்றனர். அப்படியானால் சகோதரியே 1தீமோ.5:6ல் "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்று எழுதப்பட்டுள்ளதே! சிந்திப்போம். கிறிஸ்துவும் கூட "...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவா.16:33). எனவே நமக்கு பாடுகள் உண்டு, நமக்கு வரும் பாடுகளே நம்முடைய சிலுவையாக இருக்கிறபடியால் நாம் தனித்தனியே நமக்கு வைக்கப்பட்டிருக்கிற சிலுவையை எடுத்துக்கொண்டு தான் இயேசுவை பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவேளை இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என அநேக சீஷர்கள் சொன்னது போல் (யோவா.6:60) நீங்களும் சொல்லலாம். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாக வாசமாயிருப்பதாக! கிறிஸ்து உலகத்தை ஜெயித்ததுபோல நாமும் ஜெயிப்போம்.

இச்செய்தி நமக்கு ஆசீர்வாதமாக இல்லையே என்றுகூட நினைக்கலாம். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் கூட எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றனர். நம்முடைய இயேசுகிறிஸ்து நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணும்படி பிதாவிடத்திற்குச் செல்லும் முன், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவா.14:27). என்று சொல்லி தன்னுடைய சமாதானத்தையே விட்டுச் சென்றுள்ளார். இப்படியிருக்க நாம் ஏன் பற்பல காரியங்களைக் குறித்து கலங்க வேண்டும்? சமாதானக்காரணராகிய சமாதான பிரபு இயேசுவை அவர் எதிர்பார்க்கிற வண்ணமாகப் பின்பற்றுவோம். அவரை அறிகிற அறிவிலே மேன்மேலும் வளர்ந்து நம் ஆத்துமாவிலே சுகமாயிருப்போம். சரீரப் பிரகாரமான அல்லது உலகப்பிரகாரமான மாம்சத்தின் கிரியைகளை அழித்து நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். உங்கள் ஆத்துமா வாழ்கிறதுபோல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். இயேவைப் பிப்பற்ற விரும்புகிற உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!